# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,131 — 1935 ம் ஸ்ரீ ஆனிமீ 28 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

**1896** ம் ஆண்டின் **13** ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.

தென மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கிலுள்ள தெவுந்திற ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்துக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் **1931** ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் **93** ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு **1897** ம் ஆண்டின் **7** ம் இலக்கச்சட்டத்தினுற் திருத்தப்பட்ட **1896** ம் ஆண்டின் **13** ம் இலக்கச் சட்டத்தின் **1** ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

ஜீ. சீ. எஸ். கொறயா,
எக்றிங் சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, **1935** ம் ஆண்டு ஆனிமீ **14** ந் உ.

தெவுந்திற ஸ்ரீ விஷ்ணு மகா தேவாலயததுக்கு யாத்திரை போதல்.

**1896** ம் ஆண்டின் **13** ம் இலக்க யாத்திரைக் கட்டளைச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதானங்கள்.

**1.** தெவுந்திற தேவாலயத்துக்குப்போகும் யாத்திரைகாரர் தெவுந்திருவில் நிற்கும் நாட்கள் **12** நாட்களுக்கு மேற்படாதிருக்கும், அவை யாவன : **1935** ம் ஆண்டு ஆடிமீ **12** ந் தேதி தொடக்கம் **23** ந் தேதி வரைக்குமேயாம். முதற்சொல்லிய நாளுக்கு முன்வந்து சேரும் அல்லது இதிற் குறிக்கப்பட்டிருக்கும் காலத்துக்குமேல் நிற்கும் யாத்திரைகாரர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

**2.** யாத்திரைக்கு முன் அல்லது யாத்திரை காலத்தில் தெவுந்திராவில் அல்லது அதற்கடுக்க இருக்கும் ஊர்களில் தொற்றுநோய், பரம்பும் நோய், அல்லது பெருவாரிநோய் உண்டுபடுமாயின், அல்லது உதவி அரசாட்சி ஏசன்றரின் அபிப்பிராயப்படி யாத்திரை காலத்தில் தெவுந்திருவுக்குப் பரம்பக்கூடிய விதமாகத் தென் மாகாணத்திலுள்ள வேறெவ்விடத்திலும் அவ்வித நோய் உண்டுபடுமாயின் யாத்திரையைத் தடுத்து அல்லது யாத்திரை நிறுத்தப்பட்டதாக வெளியரங்கப்படுத்தி, தெவுந்திருவில் வந்திருப்பவர்கள் யாவரையும் உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போய் விடும்படி கட்டளையிடவும் அவர்கள் இன்ன பாதையாற் போகவேண்டும் என்பதாகக் குறிக்கவும் உதவி அரசாட்சி ஏஜன்றருக்கு நியாய முறைப்படி அதிகாரமுண்டு. உதவி அரசாட்சி ஏஜன்றரின் கட்டளையை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

**3.** பரம்பும் நோய் அல்லது தொற்று நோயாற் பீடிக்கப்பட்டிருந்து, சௌக்கியாதார பரிசோதனைகாரருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவர்கள் இல்லாத நேரத்தில் தெவுந்திருவிலிருக்கும் பொலீஸ் உத்தியோகஸ்தருள் முதல் உத்தியோகஸ்தருக்கு உடனே அதைப்பற்றி அறிவியாதுவிடும் எவரும் அவ்வித நோயிருப்பதை மறைத்து வைப்பதற்கு தூண்டிவிடும் அல்லது உதவிசெய்யும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

**4.** யாத்திரை காலத்தில், தெவுந்திருவில், உதவி அரசாட்சி ஏஜன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரால் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலேயன்றி வேறெவ்விடத்திலும் மீன் அல்லது காய்கறி வைத்து விற்கும் எவரும், ஒரு சௌக்கியாதார பரிசோதனைகாரனுல் அல்லது ஒரு வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது அவர்கள் இல்லாத நேரத்தில் முதலியாரால் அல்லது தெவுந்திருவில் வந்திருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தருள் தலைமை உத்தியோகஸ்தரால் சுகத்துக்கேற்றன வல்லவென விலக்கப்பட்ட எவ்வித மாமிசத்தையாவது, போசனத்தையாவது பானத்தையாவது, விற்கும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

**5.** யாத்திரை காலத்தில் தெவுந்திருவில் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பலகாரங்களும், இனிப்புப் பண்டங்களும் மற்றைய சாப்பாட்டுச் சாமான்களும் நன்றுகச் செய்யப்பட்ட கண்ணுடிப் பெட்டிகளில் அல்லது இலையான் போகக்கூடாத வேறு பாத்திரங்களில் வைத்திருக்கப்படல் வேண்டும். அப்பாத்திரங்கள் சுத்தமாய் இருக்க வேண்டும்.

**6.** யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது (நிலத்தைக் குத்தகை கொடுத்திருந்தால்) குத்தகைக்காரர். யாத்திரைகாலம் முழுதாக நிலைக்கக்கூடிய கக்கூசுகள், உதவி அரசாட்சி ஏஜன்றரின் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரின் அனுமதிபெற்ற இடத்திலும், மாதிரியாயும் கட்டிக்கொடுத்து ஏற்ற வசதிகள் செய்யக் கடமைப்பட்டவராவர். இந்நோக்கத்துக்காக யாத்திரை தொடங்க குறைந்தமட்டில் **10** நாட்களுக்குமுன் உதவி அரசாட்சி ஏஜன்றரின் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரின் அனுமதி பெற்றுக்கொள்ளும்படி படங்களும் விவர இடாப்பும் அவர் அனுப்பிவைக்க வேண்டும். மேலும் யாத்திரை காலம் முடியும்வரையும், தென்னந்தும்புத்தூள் அல்லது மணலும் உதவி அரசாட்சி ஏஜன்ரர் ஏற்றுக்கொண்ட தரத்திலுள்ள நெருப்புத் தண்ணீரும் ஒழுங்காகக்கொடுப்பதும் குறைந்தமட்டில் நாளுக்கு இருதரம் கக்கூசுகளிலிருக்கும் அழுக்கை அகற்றிச் சுத்தப்படுத்திவிப்பது அவரது கடமையாகும். இந்த ஒழுக்க விதியின் ஏற்பாடுகள் எதையும் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் மீறி நடக்கு மிடத்து அவர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

**7.** யாத்திரை காலத்தில் உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத்தில் அல்லது யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரரால் நியமித்து விடப்பட்ட இடத்திலேயன்றி வேறெவ்விடத்திலேனும் மலசலங் கழிக்கு மெவரும் அல்லது கழிந்த அழுக்கை மண்ணுல் அல்லது மணலினுல் மூடத்தவறு மெவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

8. யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது நிலத்தைக் குத்தகை கொடுத்திருந்தால், குத்தகைகாரர் அவ்விடத்திலுள்ள வைக்கோல், குப்பை, சாணி அல்லது எவ்வகையான கூளத்தையும் ஒரு நாளைக்குக் குறைந்தமட்டில் ஒரு முறையாவது கூட்டி அள்ளுவிக்கும் பொறுப்புடையவராவர் அக் குப்பை கூளம் எல்லாம் உதவி அரசாட்சி ஏஜன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத தலைவரால் ஏற்றதென் றனுமதிபெற்ற ஓரிடத்திற் சேர்த்து எரிக்கப்படவேண்டும் அல்லது புதைக்கப்பட வேண்டும். இந்த ஒழுக்கவிதியின் ஏற்பாடுகளை நிறைவேற்ற அல்லது நிறைவேற்றுவிக்கத் தவறும் எந்தச் சொந்தக்காரராவது குத்தகைக்காரராவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

9. யாத்திரையின் நோக்கத்துக்காக மாத்துறையிலிருந்து தங்காலைக்குப்போகும் பெரிய ரோட்டினதும் தேவாலயத்துக்குச் செல்லும் ரோட்டினதும் பக்கக் காணிலிருந்து 12 அடி தூரத்துக்குள் ஒரு கொட்டிலாவது வேறு கட்டடமாவது கட்டப்படக்கூடாது. இந்தத் தூர இடைவெளிக்குள்ளே எந்தக் கடைக்காரனாவது வெற்றிலை அல்லது வேறு சாமான் விற்கும் எவராவது அவ்வித பண்டத்தையாவது விற்கும்படியாக வெளியாய் வைக்கப்படாது. இந்த ஒழுக்க விதியை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

10. வந்திருப்பவர்களின் உபயோகத்துக்காகவேனும் வண்டிகள் விடுவதற்காகவேனும் தெவுந்திருவில் உதவி அரசாட்சி ஏஜன்றரால் புறம்பாக வைக்கப்பட்ட நிலப்பாகத்தில் ஒரு கொட்டிலாவது வேறு கட்டடமாவது கட்டப்படக்கூடாது. இந்த ஒழுக்கவிதியின் ஏற்பாடுகளை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்தகுற்றமுடையவராவா.

## காணி விற்பனவுகள்.

**Jaffna No. 61.**—1935 ம் ஆண்டு ஆவணி ௴ 27 ௳ திகதி, செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பரித்தித்துறை வாடி வீட்டில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்த்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

8 காணித்துண்டுகள், வட மாகாணத்து வடமராட்சிப் பகுதியிலிருக்கின்றது.

வடமராட்சி.

பிளான் இலக்கம் A 653. குறிச்சி—செம்பியன்பற்று. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மணல் காடு .. | — | .. தரவை பாதைக்காகச் சேமிக்கப்பட நிலம் .. | 0 | 0 | 16 | —* |
| | | | உரித்தாளி—முடி. மேற்படி கேளவிக்காறனால் குத்தகையாய் எடுக்கப்பட்ட நிலம். | | | | |
| 2 | மணல் காடு .. | அ. பிலிப்பு | .. சிறுகாடு, காய்கறி உள்ள ஓர் அடைப்பு உண்டு | 1 | 0 | 4 | 20 |
| | | | உரித்தாளி—முடி. | | | | |
| 3 | மணல் காடு .. | எஸ். பேதுறுபிள்ளை | சிறுகாடு .. .. | 1 | 0 | 2 | 20 |
| | | | பிளான் இலக்கம் A 487. குறிச்சி—கற்கோவளம். உரித்தாளி—முடி. | | | | |
| 16 | ஐயன்கோயில் வெளி .. | — | .. 10 வயதுள்ள சவுக்கம் தோட்டம், பரித்தித்துறை, எம். கிட்டினர் பெண் தங்கமுத்துவால் கூட்டிப்பிடித்த நிலம் | 0 | 3 | 14 | 80† |
| 17 | ஐயன்கோயில் வெளி தோட்டம் | — | .. 10 வயதுள்ள தென்னையும் சவுக்க மரமும் உள்ள தோட்டம், முருகப்பர் சின்னையாவால் கூட்டிப்பிடித்த நிலம் | 0 | 1 | 29 | 80† |
| 19 | ஐயன்கோயில் வெளி | — | .. பத்துவயதுள்ள பனந்தோட்டம், முருகப்பர் சின்னையாவால் கூட்டிப்பிடித்த நிலம் | 0 | 0 | 36 | 80† |
| 20 | ஷை .. | — | .. பத்துவயதுள்ள சவுக்க மரமுள்ள தோட்டம், டீ. கே. சின்னதம்பியால் கூட்டிப்பிடித்த நிலம் | 0 | 0 | 35 | 80† |
| 21 | ஷை .. | — | .. ஷை .. .. | 0 | 0 | 16 | 80† |

* விற்பனவுக்கல்ல. † தீர்த்துக்கொடுக்கப்படும்.

இக்காணிகளின் வேறுவிபரங்கள் வடமாகாணக கவண்மேந்து ஏசன்றரிடமிருந்தும் படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ஆண்டு ஆனி ௴ 21 ௳.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

**Jaffna No. 62**—1935 ம் ஆண்டு ஆவணி ௴ 23 ௳ திகதி, வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி வாடி வீட்டில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்த்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

17 காணித்துண்டுகள், வட மாகாணத்து தென்மராட்சி, பச்சிலபள்ளி, கரைச்சி பகுதியிலிருக்கின்றது.

தென்மராட்சி.

பிளான் இலக்கம் 7,978. குறிச்சி—மீசாலை வடக்கு. உரித்தாளி—முடி, (1) அருணசலம் பெண் தெய்வானை, (2) கனகர் நமசிவாயம், (3) பண்டாரம் அருணசலம், (4) நல்லதம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளையும் மறுபேரும் கூட்டிப்பிடிக்கப்பட்ட நிலம்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொட்டியல்கும்பன் அல்லது மதலைதோட்டம் | — | .. தோட்டம் .. .. | 0 | 1 | 2 | 160 |
| | | | பிளான் இலக்கம் A 445. குறிச்சி—மந்துவில். உரித்தாளி—முடி, சின்னட்டி கந்தையாவால் கூட்டிப்பிடிக்கப்பட்ட நிலம். | | | | |
| 7 | கபிரவெளி .. | — | .. 25 வடதுள்ள பனந்தோட்டம் .. | 0 | 0 | 30 | 60* |
| | | | பிளான் இலக்கம் A 848. குறிச்சி—கைதடி. உரித்தாளி—முடி. | | | | |
| 1 | காண்டைகாடு .. | — | .. தரவை, வண்டில் பாதைக்காக சேமிக்கப்படும் .. | 0 | 0 | 14 | —† |
| 2 | ஷை .. | — | .. தரவை .. .. .. | 0 | 0 | 31 | 35 |
| 3 | ஷை .. | — | .. தரவை .. .. .. | 1 | 1 | 32 | 35 |
| 4 | ஷை .. | — | .. தரவை, வண்டில் பாதைக்காக சேமிக்கப்பட்டது | 0 | 0 | 36 | —† |
| 5 | ஷை .. | — | .. ஷை .. .. | 0 | 0 | 8 | —† |
| 6 | சத்துரிகடவைபுலம் அல்லது காண்டைகாடு | சி. செல்லையா | .. தரவை .. .. .. | 0 | 2 | 3 | 80 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம் | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | பிளான் இலக்கம் A 849. குறிச்சி—கைதடி. உரித்தாளி—முடி. | | |
| 1 | வேல்அவரைகாடு | எம். கோவிந்தன் | தரவை | 1 0 19 | 160 |
| 2 | ஷை | — | தரவை, பாதைக்காக சேமிக்கப்பட்டது | 0 0 33 | —† |
| 3 | ஷை | — | தரவை | 0 3 18 | 192 |
| 4 | ஷை | — | ஒழுங்கைக்காக சேமிக்கப்பட்டது | 0 0 10 | —† |
| | | | பிளான் இலக்கம் A 859. குறிச்சி—கைதடி. உரித்தாளி—முடி. | | |
| 1 | ஊரியன் | எச். செல்லப்பா | தரவை | 0 3 30 | 48 |
| 2 | ஷை | — | தரவை, வாய்க்காலுக்காக சேமிக்கப்பட்டது | 0 0 15 | —† |
| | | | உரித்தாளி—முடி, ஆறு. சின்னத்தம்பி, கைதடி. | | |
| 3 | ஷை | — | கூட்டிப்பிடித்த பனந்தோட்டம் உரித்தாளி—முடி. | 0 1 4 | 48* |
| 4 | — | — | வாய்க்காலுக்காக சேமிக்கப்பட்டது | 0 0 1 | —† |
| | | | பச்சிலைப்பள்ளி கரைச்சி. | | |
| | | | பிளான் இலக்கம் A 619. குறிச்சி—ஊரியான். உரித்தாளி—முடி. | | |
| 1 | புதுக்காடு அல்லது மருதடிகாடு | வி. செல்லப்பா | சில மரங்கள் உள்ள புதிதாய் வெட்டிய காடு | 2 0 10 | 20 |

* தீர்த்துக் கொடுக்கப்படும். † விற்பனவுக்கல்ல.

இக்காணிகளின் வேறு விபரங்கள் வட மாகாண ஏசன்றரிடமிருந்தும் படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர், கொழும்பு, 1935 ம் ஆண்டு ஆனிமீ 21 ந் உ.

சீ. வீ. பிறெயின், காணிக் கொம்மிஷனர்.

---

**Jaffna No. 63.**—1935 ம் ஆண்டு ஆவணிமீ 21 ந் திகதி, புதன்கிழமை காலை பத்துமணி அளவில் விற்பனவு வங்களாவில் வட மாகாணத்து கவறண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணிவிற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்த்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

13 காணித்துண்டுகள், வட மாகாணத்து பூனகரி, துணுக்காய், வலிகாமம் மேற்கு, வலிகாம வடக்கு, கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

பூனகரி துணுக்காய்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்புவிலை. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | பிளான் இலக்கம் A 858. குறிச்சி—பாலாவி. உரித்தாளி—முடி. | | |
| 1 | கட்டைகாடு | எம். அருளையா | சிறுகாடு | 2 3 34 | 20 |
| | | | பிளான் இலக்கம் A 829. குறிச்சி—ஞானிமடம். உரித்தாளி—முடி. | | |
| 1 | உயன்குளத்துவயல் | — | வயல், எச். செல்லப்பனுல் கூட்டிப பிடித்த நிலம் | 0 1 26 | 96 |
| 2 | உயன்குளம் | — | குளத்துக்காக சேமிக்கப்படும் | 4 3 15 | —* |
| | | | பிளான் இலக்கம் A 878. குறிச்சி—ஆலன் கேணி. உரித்தாளி—முடி. | | |
| 1 | பூகுளம் | — | குளத்துக்காக சேமிக்கப்படும் | 80 0 15 | —* |
| 2 | செங்கள்புட்டி | — | செய்யாது விடப்பட்ட புகையிலை காணி, யாழ்ப்பாணம் சோனகதெரு முகமது மீரான் கண்டின் உரித்தாளரால் கூட்டிப் பிடித்த நிலம் | 1 0 7 | 20 |
| | | | வலிகாமம் மேற்கு. | | |
| | | | பிளான் இலக்கம் A 854. குறிச்சி—பண்டதரிப்பு. உரித்தாளி—முடி | | |
| 1 | ஓடைமாறியபுலம் | எம். நல்லதம்பி | தோட்டம், கேள்விக்காரனுல் கூட்டிப் பிடித்த நிலம் | 0 1 29 | 480 |
| 2 | மச்சாள் நிலம் | — | தரவை, வண்டில்பாதைக்காக சேமிக்கப் படும் நிலம் | 0 0 14 | —* |
| | | | வலிகாமம் வடக்கு, கிழக்கு. | | |
| | | | பிளான் இலக்கம் A 321. குறிச்சி—புத்தூர் மேற்கு. உரித்தாளி—முடி. | | |
| 1 | செப்படிமேடை | பி. கனகசபை பெண், வள்ளி பிள்ளை | தோட்டம், தரவை, கேள்விக்காரனுல் கூட்டிப் பிடித்த நிலம் | 0 1 14·3 | 575† |
| | | | பிளான் இலக்கம். A 745. குறிச்சி—சிறுபிட்டி உரித்தாளி—முடி. | | |
| 1 | பிரியான்காடு | — | தரவை, மேச்சலுக்காக சேமிக்கப்பட்ட நிலம் | 5 0 33 | —* |
| 2 | ஷை | வி. இளையவன் | தரவை | 0 2 2 | 35 |
| 3 | ஷை | ஆர். சீனியன் | தரவை | 0 2 3 | 35 |
| 4 | ஷை | அ. சின்னபொடியன் | தரவை | 0 2 0 | 35 |
| 5 | ஷை | க. காக்கையன் | தரவை | 0 1 35 | 35 |

* விற்பனவுக்கல்ல † தீர்த்து கொடுக்கப்படும்.

இக்காணிகளின் வேறு விபரங்கள் வடமாகாண ஏசன்றரிடமிருந்தும் படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர், கொழும்பு, 1935 ம் ஆடு ஆனிமீ 21 ந் உ.

சீ. வீ. பிறெயின், காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு ஸ்ரேட்டுத் துவங்கி பெரிய முல்ல டெயகொண்ட ஏல ஸ்ரேட்டு வரைக்கும் 30 அடி அகலத்தில் திறத்தற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டிய தான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதம்படத்து இல A 488. குறிச்சி—குறன, 3 ம் பகுதி.

| காணியினது துண்டு. | பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தல்கசவத்த, இறைவரி இல. 40 | தென்னங்காணி, 15 வருஷம் துவங்கி 30 வருஷம்வரை சென்ற 12 தென்னையும், 15 வருஷம் சென்ற 3 கமுகுவும் அடிப் பாதையின் பகுதியுமுள்ளது | ஏ. மனுவல்பொன்சேகா, குறன 3 ம் பகுதி | 0 0 16·6 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | அம்பககவத்த, இறை வரி இல. 41 | தென்னங்காணி, 30 வருஷம் சென்ற 9 தென்னையும், 10 வருஷம் சென்ற ஒரு பெல்லி மரமுமுள்ளது | கே. எல். பெறிரு, குறன, 2 ம் பகுதி | 0 0 12·5 |
| 3 | வண்டிற்பாதை .. | வண்டிற்பாதை .. .. | ஷை .. | 0 0 5·3 |
| 4 | தல்ககவத்த, இறைவரி இல. 43 ன் பகுதி | தோட்டம், 25 வருஷம் சென்ற ஒரு பலா மரம் உள்ளது | டி. யோன் பெறிரு, டி. எச். பேறிரு, டி. சி. பெறிரு, கே. எல். பெறிரு, குறன, 2 ம் பகுதி | 0 0 1·3 |
| 5 | ஷை . | தோட்டம், 20 வருஷம் சென்ற ஒரு கொறக்கா மரமும், 20 வருஷம் சென்ற ஒரு கசுமரமுமுள்ளது | ஜயசிங்க ஆராச்சிகே மறியானு சில்வா, குறன, 3 ம் பகுதி | 0 0 4·9 |
| 6 | தல்ககவத்த, இறைவரி இல. 42 ன் 49 ன் பகுதி | தென்னங்காணி, 20 வருஷம் சென்ற 6 தென்னையும், 3 வருஷம் துவங்கி 5 வருஷம் வரையும் சென்ற 17 தென்னங்கன்றும், 15 வருஷம் சென்ற ஒரு பலாவும் 10 வருஷம் சென்ற 1 கசுமரமுமுள்ளது | ரி. வியோ பேர்ஞந்து, குறன, 3 ம் பகுதி | 0 0 21·6 |
| 7 | தல்ககவத்த, இறை வரி இல. 43 ன் பகுதி | தோட்டம், 10 வருஷம் துவங்கி 20 வருஷம் வரை சென்ற 3 பலா மரமும், 15 வருஷம் சென்ற ஒரு கொறக்கமரமும், வேய்ந்த கொட்டிலின் பகுதியும் வேய்ந்த குசினியின் பகுதியுமுள்ளது | ஒ. ரெசலின் பொன்சேகா, குறன, 3 ம் பகுதி | 0 0 4·8 |
| 8 | தல்ககவத்த, இறைவரி இல. 44 ன் பகுதி | தோட்டம், 20 வருஷம் சென்ற ஒரு மில்ல மரமும் | டி. பேதுரு பெறிரு, டி. மார்சல் பெறிரு, டி. மதிகாமி பெறிரு, குறன, 2 ம் பகுதி, டி. அந்தோனி பெறிரு, குறன, 4 ம் பகுதி | 0 0 1·7 |
| 9 | தல்ககவத்த, இறைவரி இல. 45 ன் பகுதி | தென்னங்காணி, 4 வருஷஞ்சென்ற மூன்று தென்னங் கன்றும், 15 வருஷஞ்சென்ற 1 பலாமரமும், 5 வருஷஞ்சென்ற 1 பலாக்கன்றும், 1 வாழை அடியுமுள்ளது | பி. போலு பெறிரு, குறன, கட்டுனயக்க, ஜீ. மனுவல் பீரிஸ், குறன, 3 ம் பகுதி | 0 0 7·2 |
| 10 | தல்ககவத்த, இறைவரி இல. 48 ன் பகுதி | தென்னங்காணி, 15 வருஷம் சென்ற 1 தென்னமரமும், 3 வஷம் துவங்கி 5 வருஷம் வரைசென்ற 7 தென்னங்கன்றும் ஒரு அடிப்பாதையுமுள்ளது | ஏ. மனுவல் பொன்சேகா, குறன, 3 ம் பகுதி | 0 0 6·9 |
| 11 | தல்ககவத்த, இறைவரி இல. 171 ன் பகுதி | தோட்டம், (வெறுங்காணி) .. | டி. ஹுசியா பெறிரு, கட்டுனயக்க | 0 0 6·8 |
| 12 | தல்ககவத்த, இறைவரி இல. 166 ன் பகுதி | தோட்டத்தின் பகுதி, (செய்கையில்லை) .. | எம். டயஸ் பீரிஸ், எம். மர்த்தினு பீரிஸ், குறன, 3 ம் பகுதி | 0 0 3·5 |
| 13 | ஷை .. | ஷை .. .. | ஷை .. | 0 0 18·5 |
| 14 | தல்ககவத்த, இறைவரி இல. 167 ன் பகுதி | கறுவா, 65 கறுவாப்பத்தையும், 10 வருஷம் சென்ற ஒரு மாடன் மரமுமுள்ளது | டி. சைமன் பெறிரு, குறன, 3 ம் பகுதி | 0 0 9 3 |
| 15 | ஷை .. | கறுவா, 9 கறுவாப்பத்தையுள்ளது .. | ஷை .. | 0 0 2·5 |
| 16 | தல்ககவத்த, இறைவரி இல. 166 ன் பகுதி | தென்னங்காணி, 1 வருஷம் சென்ற 2 தென்னங்கன்றுள்ளது | ரி. எல். பேர்ஞந்து, குறன, 3 ம் பகுதி | 0 0 3·7 |
| 17 | ஷை .. | ஷை .. .. | ஷை .. | 0 0 8·2 |
| 18 | கொறக்ககவத்த, இறை வரி இல. 163 ன் பகுதி | தென்னங்காணி, 10 வருஷம் துவங்கி 15 வருஷம்வரை சென்ற 13 தென்னமரமும் 5 வருஷம் சென்ற 1 கசுமரமுமுள்ளது | கஜசிங்க ஆராச்சிகே பீற்றர் சில்வா, குறன, 3 ம் பகுதி | 0 0 15 |
| 19 | பிளேக் எஸ்ரேற, இறை வரி இல. 161 ன் பகுதி | தென்னங்காணி, 15 வருஷம் சென்ற 5 தென்னமரமும், 3 வருஷம் துவங்கி 5 வருஷம் வரையுள்ள 9 தென்னங்கன்றுமுள்ளது | எவ். டபிள்யு விஜயசிங்க, மயுன்ற் லவினியா | 0 0 23 |
| 20 | கொகம்பககவத்த, இறை வரி இல. 162 ன் பகுதி | கறுவா, 11 கறுவாப்பத்தையும், 10 வருஷம் சென்ற 1 கோன் மரமும், 20 வருஷம் சென்ற ஒரு கசுமரமுமுள்ளது | டி. மிகெல் பெறிரு, குறன, 3 ம் பகுதி | 0 0 3·4 |
| 21 | ஷை .. | கறுவா, 33 கறுவாப்பத்தையும், 20 வருஷம் சென்ற 1 கசுமரமும், 10 வருஷம்சென்ற 4 மில்ல மரமும், 10 வருஷம் சென்ற 1 மாமரமும், 10 வருஷம் சென்ற 1 பலா மரமும், 10 வருஷம் சென்ற 1 கொகம்ப மரமும், 30 வருஷம் சென்ற 1 கொகம்ப மரமுமுள்ளது | எஸ். எஸ். சவரி பேர்ஞந்து, குறன, 3 ம் பகுதி | 0 0 4·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஒகஸ்ட்) ஆவணிமாசம் 13 ௳ தேதியிலன்று 9.30 மணிக்கு நீர்கொழும்பு நகரசங்க கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி, 1935 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 24 ௳.

கார்ள் ஈ. ஆண்ட், உதவி அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றனலஏலவில் ஓர் வெள்ளக்கதவுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடம் இல. A 484. குறிச்சி—றனலவும் ஜல்ஏறவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | எல்லமுல்லேவத்த .. | வெறுங்காணி, 10 மூங்கில் மரமுள்ளது | ஆர். டி. ஜீ. விஜயவர்தன, றனல | 0 0 0·80 |
| 2 | றனலஏல .. | ஏல .. .. | ஷை .. | 0 0 2·90 |
| 3 | ஷை .. | ஏல .. .. | எல். மாற்றின் அப்புகாமி, றனல | 0 0 0·35 |

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 4 | எல்லமுல்லேவத்த .. | தோட்டம், 4 வருஷம் துவங்கி 25 வருஷம் வரையும் சென்ற 3 கமுகுவும், இப்போ கட்டப்படும் அணையின் பகுதியுமுள்ளது | ஆர். டி. ஜி. விஜயவர்தன, றனுல | 0 | 0 | 2·02 |
| 6 | கங்கபடவத்த அல்லது பள்ளமுல்லேவத்த | வெறுங்காணி, இப்போ கட்டப்படும் அணையின் பகுதியுமுள்ளது | டி. எஸ். றனசிங்க அல்லது சீமான் முதலாளி | 0 | 0 | 2·90 |
| 7 | றனுலஏல .. | எல .. .. | ஷை .. | 0 | 0 | 2·75 |
| 8 | எல்லமுல்லேவத்த .. | தென்னங்காணி, 30 வருஷம் சென்ற ஒரு தென்னையுள்ளது | ஆர். டி. ஜி. விஜயவர்தன, றனுல | 0 | 0 | 1·40 |
| 9 | றனுலஏல .. | எல .. .. | ஷை .. | 0 | 0 | 2·70 |
| 10 | ஷை .. | எல .. .. | டி. எஸ். றனசிங்க அல்லது சீமான் முதலாளி, றனுல | 0 | 0 | 3·95 |
| 11 | கங்கபடவத்த அல்லது பள்ளமுல்லேவத்த | தென்னங்காணி, 30 வருஷம்சென்ற ஒரு தென்னையும் இப்போ கட்டுப்படும் அணையின் பகுதியுமுள்ளது | ஷை .. | 0 | 0 | 5 |
| 12 | றனுல .. | எல .. .. | எல். மாட்டின் அப்புகாமி, றனுல | 0 | 0 | 0·80 |
| 13 | கங்கபடவத்த அல்லது பள்ளமுல்லேவத்த | தென்னங்காணி, ஏறக்குறைய 15 வருஷம் சென்ற ஒரு தென்னையும், ஏறக்குறைய 30 வருஷம்சென்ற ஒரு தென்னையும், 3 வாழைஅடிகளும், இப்போ கட்டப்படும் அணையின் பகுதியுமுள்ளது | ஷை .. | 0 | 0 | 2·55 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1935 ம் ஹூ ஆவணிமாசம் 16 ந் தேதியிலன்று 10.30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ஹூ ஆனிமீ 24 ந் உ.

ஏ. ஆர். மக்டொனுல்ட்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெய்யனுவலையில் கண்டி நகரசங்கத்தால் கட்டப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகளிலிருக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலைக்கும் விளையாட்டு இடத்திற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 271. குறிச்சி—தெய்யனுவல, கண்டி நகரசங்க எல்லைக்குள், கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மல்வத்தைகெதறவத்த 57, 57A ம் அசெஸ்மென்றில் பகுதிகள் | தோட்டம், 25 வயசுள்ள 1 மோருமரமுண்டு | கண்டி நாததேவாலயத்தின் பராமரிப்புக்காறரும், கண்டி மிசிஸ். கதிரவேல் பொன்னுசாமிபிள்ளையும், கொழும்பு புகையிரதப் பகுதி எஸ். ஏ. கிரிநெவிசும் (குத்தகைகாரர்) | 0 | 0 | 1·12 |
| 2 | மல்வத்த கெதரவத்த, 57B, 57C, அசெஸ்மென்றில் பகுதிகள் | 15–25 வயதுள்ள 1 பலா மரமும் 1 மாமரமுள்ள தோட்டம் | கண்டி நாததேவாலயத்தின் பராமரிப்புகாரர் தெய்யனுவல, யஸ்ரினு பர்னுந்துவுக்கும், அங்கோ பர்னுந்துவுக்கும், காளினு பர்னுந்துவுக்கும் குத்தகைக்கு கொடுத்திருக்கிறது | 0 | 0 | 4·17 |
| 3 | பத்தாலமுறே கும்புற 58, 59 ம் அசெஸ்மென்றில் பகுதிகள் | தோட்டம், 10 வயதுபோன தென்னமரங்களும், 15–25 வயதுள்ள 8 கமுக மரங்களும், 15 வயதுள்ள 1 கொக்கோ மரமும் 1 ஓட்டால் வேய்ந்த கல் வீடும், 1 ஓட்டால் வேய்ந்த கக்கூசும், 1 கிணறுமுண்டு | கண்டி நாததேவாலயத்தின் பராமரிப்புக்காரர் கண்டியில் கொழும்பு வீதியில் 186 ம் இலக்கத்தில் இருக்கும் எம். கே. முகமது அலிக்குக் குத்தகை கொடுத்திருக்கிறது | 0 | 1 | 26·90 |
| 4 | தித்தினுவத்த அல்லது பத்தாலமுறேவத்த, 61 ம் இல. அசெஸ்மென்றில் பகுதி | தோட்டம், 1 வயதுபோன தென்னமரமும், 8 வயதுள்ள 2 தென்னமரங்களும், 15–20 வயதுள்ள 8 கமுக மரங்களும், 4 வயதுள்ள 1 கமுக மரமும், 1 வயதுபோன மாமரமும், 2 வயதுபோன பலா மரங்களும், 20 வயதுள்ள 1 சூரியமரமும், 10 வயதுள்ள 3 கித்துல்மரங்களும், 1 கெக்குனு மரமும், 1 கசு மரமும், 1 ஜம்பு மரமும், 1 கொறக்க மரமும், 15 வயதுள்ள 1 ஜம்போல மரமும், 1 மிழகு செடியும், 5 வயதுள்ள 2 பப்பா மரங்களும், 8 வயதுள்ள 1 கொக்கோ மரமும், 2–5 வவதுள்ள 3 முருங்கை மரங்களும் 3 வயதுள்ள 3 தென்னம்பிள்ளைகளும், 1 வயதுள்ள 1 மாங்கன்றும், 2 வயதுள்ள 2 வாழைப்பத்தையும், 2–3 வயதுள்ள கரும்பும், அன்னதாளையும், மரக்கறி வகைகளும், 1 ஓட்டால் வேய்ந்த கல் வீடுமுள்ளது | கண்டி நாததேவாலயத்தின் பராமரிப்புகாரர் கொட்டகலை புகையிரதப் பகுதியிலிருக்கும் கே. ஏ. பெரறுவுக்கு குத்தகை கொடுத்திருக்கிறது | 0 | 1 | 24·35 |

GP 9594

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 5 | சென்ற தெரிசா அல்லது செபால்கெ வத்த 66 ம் இலக்க அசெஸ்மென்றில் பகுதி | வெறுநிலம் .. .. | கண்டி நாத தேவாலயத்தின் பராமரிப்புகாரர், தெய்யனுவல, வி. அலிஸ் நோனா செலோசாமிக்கும் மறுபேருக்கு குத்தகைக்கு கொடுத்திருக்கிறது | 0 0 0·88 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 30 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1935 ம் ௵ (ஜூன்) ஆனி௴ 21 ௳.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உப அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகலகேம்பிய என்னுமிடத்தில் ஓர் அரசினர் பாடசாலையை ஸ்தாபித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 260. குறிச்சி.—பகலகேம்பிய.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வறகபிற்றியேவத்தே துடுவை | 8–40 வயதுள்ள 7 தென்னையையும், 5–30 வயதுள்ள 30 கமுகையும், 30–50 வயதுள்ள 4 பலாவையும், நிலையற்ற பயிரையும், 14×14 அடி அளவுள்ள ஓட்டுவீட்டையும், 60×20 அடி அளவுள்ள பாடசாலைக் கட்டடத்தையும், 20×15 அடி அளவுள்ள சமையலறையையும், 9×6 அடி அளவுள்ள மல கூடத்தையும், கொண்ட ஓர் தோட்டம் | பகலகேம்பியாவிலுள்ள யற்றமலகலபத்திறனகே காணெல் | 1 0 19·6 |
| 2 | கல்லனேவத்தை அல்லது வறகப்பிற்றியேவத்தே துடுவை | 12×12 அடி அளவுள்ள ஓட்டுவீட்டையும், நிலையற்ற பயிரையுங்கொண்ட தோட்டம் | பகலகேம்பியாவிலுள்ள யற்றமலகலபத்திறனகே காணலும், யற்றமலகலபத்திறனகே நிக்கோலஸ் எனும் இருவரும் | 0 0 21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 26 ந் தேதியிலன்று 10 மணிக்குக் காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1935 ம் ௵ (ஜூன்) ஆனி௴ 25 ௳.

டபிள்யு. ஜே. எல். ரூஜர்சன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கினிமெல்லகஹா என்னுமிடத்தில் ஓர் அரசினர் பாடசாலையை ஸ்தாபித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 263. குறிச்சி—மேற்குக் கினிமெல்லகஹா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | தெல்கஹாவத்தை | மேசன் மாராற் செய்யப்பட்ட ஓர் கிணற்றையும், மேசன்மாராற் செய்யப்பட்ட ஓர் ஓட்டு மல கூடத்தையும், மேசன்மாராற் செய்யப்பட்ட ஓர் ஓட்டுப் பள்ளிக்கூடக் கட்டடத்தையுங் கொண்ட தோட்டம் | மேற்கு கினிமெல்லகஹாவின் வெத ஆராய்ச்சியான டபிள்யு. எச். டபிள்யு. வீரசிங்க | 1 0 7 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 26 ந் தேதியிலன்று 11 மணிக்குக் காலிக் கச்சேரியில் என்முன்பாகவெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1935 ம் ௵ (ஜூன்) ஆனி௴ 25 ௳.

டபிள்யு. ஜே. எல். ரூஜர்சன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொடவிற்ற ரோட்டை விசாலமாக்குவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

படத்து இல. 1,492 ம் இலக்கக் கடைசிக் கிராமபடத்தின் 3 ம் அநுபந்தம். குறிச்சி—வடமேல் மாகாணத்தில், குருணாக்கல் டிஸ்திரிக்கில், தம்பதெனிஹற்பத்துவில், தெகொடபத்து கோறளையில் உள்ள அமுனுகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 159A | தங்கொல்லெவத்த | தென்னந்தோட்டம் .. | தென்னக்கோன் முதியன்செலாகே டிங்கிரி வண்டாவும் மறுபேரும் | 0 0 34·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஞூ (ஜூலை) ஆடி மாசம் 24 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு குருணக்கல் க்ச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

குருணகல் கச்சேரி,
1935 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 21 ந் உ.

ஆர். என். பொன்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணக்கல் டிஸ்திரிக்.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு கன்சபாவ ரேட்டிற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 293. குறிச்சி—வடமேல் மாகாணத்தில், குருணகல் டிஸ்திறிக்கில், தெவமெதிஹத்துவில், உடுகசக் கோறளையில் உள்ள மொறகொல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வயகொல்லெவத்த .. | தென்னந்தோட்டம் .. | மொறகொல்லவைச்சேர்ந்த எஸ். எம். புஞ்சி ரூலவும், பகலமடவலவைச்சேர்ந்த எஸ். எம். மெனிக்ரூலவும், எஸ். எம். புஞ்சிமெனிக்காவும் | 0 1 18 7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஞூ (ஜூலை) ஆடி மாசம் 26 ந் தேதியிலன்று காலை 10½ மணிக்கு குருணகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணகல் கச்சேரி,
1935 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 21 ந் உ.

ஆர். என். போன்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணகல் டிஸ்திறிக்.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

இதன்கீழ் கையொப்பம்வைக்கும் இரத்தினபுரி டிஸ்திறிக், குருவிட்டி கோறளை உடபததுவையில் மல்வலையில் இருக்கும், குட்டிகந்தெ விதானெலாயே புஞ்சிமஹத்மயா வாகிய நான், 1907 ம் ஆண்டு 1 ம் நிம்பர் நொத்தாறிஸ் சட்டத்தின், செடூல் 1 B. 2 வது பிரிவின் பிரகாரம் இன்று தொட்டு மூன்று மாசம் சென்றதின்பின் இரத்தினப்புரி டிஸ்திறிக்கில், சிங்கள பாஷையில பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்க்க பதிவுத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்ய நான் எண்ணியிருக்கிறேனென்று இத்தால் அறிவிக்கிறேன்.

கே. வீ. புஞ்சிமஹத்மயா.

மல்வலை,
1935 ம் ஞூ மேமீ 13 ந் உ.

காலி டிஸ்திறிக்கில் கங்கபடபத்துவில் கொதேவலையில் வசிக்கும் கங்கானம்கமகே தொன் பீடர் அபயசிறிவர்தன ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 1B என்னும் செடுலினது 2 ம் செக்சன்படி சிலாப டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்ஆக வேலைபார்ப்பதறகு இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் றெஜிஸ்ரூர் ஜனறூல் அவர்க்ளிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்

கே. டீ. பீ. அபயசிறிவர்த்தன.

1935 ஞூ வைகாசிமீ 12 ந் உ.

---